ஆய்வு செய்வதன் மூலம் பெருமளவுக்கு வேதாரண்யம் பகுதியி லுள்ள உப்பு உற்பத்தியாளர்கள் கஷ்டங்கள் தீர்த்து வைக்கப் படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மா. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, இப்போது விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதிலே பல காரணங்கள் சொல்லியிருந்தாலும், அந்த உப்பை வெளி மாநிலங் களிலே ஏற்றுமதி செய்வதற்கு, நாகப்பட்டினம் துறைமுகம் மூலமாக, கப்பல் மூலமாக ஏற்றுமதி செய்வதற்கு அரசு ஏற் பாடு செய்யுமா? அத்துடன்,—ரசாயன உப்பு—மிகவும் பற்றாக் குறையாக நமது மாநிலத்திலே இருக்கிற காரணத்தால், ரசாயன உப்பைத் தயார் செய்ய, அந்தப் பகுதி உப்பு உற்பத்தியாளர் களை ஏதாவது ஊக்குவித்து, உப்பு உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, ரசாயன உப்பு உற்பத்தியில் ஏற்கெனவே இருக்கிற உற்பத்தி யாளர்கள் ஆர்வம் காட்டி வருகிறார்கள். உற்பத்தியிலும் ஈடு பட்டு வருகிறார்கள். சென்ற ஆண்டு 2 இலட்சத்து 78 ஆயிரம் டன் ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்த ஆண்டு, அது 42 ஆயிரம் டன்னாக குறைந்து போய் விட்டது. அதற்குப் பல்வேறு காரணங்கள். லாரி கிடைக்காதது ஒரு காரணம். வெளியிலே அதிக உற்பத்தியானதன் காரணமாக, விலைச் சரிவு ஏற்பட்டு விட்டது. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்களை அழைத்து, உப்பு உற்பத்தியாளர்களை எல்லாம் கூட்டி வைத்து, வேதா ரண்யம் பகுதியிலே ஏன் உப்பு வெளியிலே எடுத்துச் செல்லப் படவில்லை என்பதை ஆராயும்படி கேட்டுக்கொண்டிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

(இ) கோயம்புத்தூரிலுள்ள வேளாண்மைப் பல்கலைக்கழக ஆசிரியர்களின் கோரிக்கைகள்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் பல காலம் வலியுறுத்தி வரும் பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத தால் வேலைநிறுத்தம் செய்ய முற்பட்டிருப்பது குறித்தும்,

இதனால் விவசாய ஆராய்ச்சி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்பும் குறித்த" அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம் கீழ்க்கண்ட எட்டு கோரிக்கைகளை விடுத்துள்ளது:—

(1) மற்ற பல்கலைக் கழகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது போல, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் 1—12—1977, லிருந்து 31—12—1980 வரையில் பணியில் இருக்கின்ற உதவிப் பேராசிரியர்களுக்கு மாதச் சம்பளம் ரூபாய் 1,100 நிர்ணயிப்பது;

(2) 10—1—1979-ல் பணியில் இருக்கும் தமிழ்நாடு பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு பிஎச்டி. பட்டம் பெறுவதற்காக வேண்டி மேலும் 5 ஆண்டுக் காலம் காலக்கெடு அளிக்க வேண்டும் என்பது குறித்தும் மற்றும் 10—1—1979-க்குப் பிறகு பணியில் உள்ள தமிழ்நாடு பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு பிஎச்டி. பட்டம் பெறுவதற்காக வேண்டிய, மேலும் 5 ஆண்டுக் காலம் காலக்கெடு அளிக்க வேண்டும் என்பது குறித்தும் ;

(3) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உள்ள எல்லா உதவிப் பேராசியர்களுக்கும் ஆரம்ப நிலை ஊதியமாக ரூ. 1,100 வழங்குவது குறித்து ;

(4) பல்கலைக் கழக ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதை 58-லிருந்து 60-க்கு மாற்றி ஆணை பிறப்பித்தல் குறித்து ;

(5) பொறியியல் இளநிலை பட்டம் தகுதியுடன் பணியில் உள்ள உதவிப் பேராசியர்களுக்கு ஊதிய உயர்வு அளித்தல் ;

(6) அரசு ஆணைப்படி பல்கலைக் கழக நூலகங்களுக்கு சம்பளம் நிர்ணயிப்பது ;

(7) வாகன கடன் அளிக்க வேண்டுவது :

(8) தூரம் மற்றும் தொலை தூரத்தில் உள்ள நிலையங்களில் வேலை செய்பவர்களுக்குச் சிறப்புப்படி வழங்குவது குறித்து ;

கோரிக்கை 1.

1—12—1977-லிருந்து 31—12—1980 வரையில் பணியில் இருக்கின்ற உதவிப் பேராசிரியர்களுக்கு ரூ. 1,100 சம்பளம் நிர்ணயம் செய்வது பற்றிய கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

கோரிக்கை : 2

10—1—1979-ல் பணியில் இருக்கும் ஆசிரியர்களுக்கு பி.எச்டி பட்டம் பெறுவதற்கு வேண்டிய காலக்கெடுவை மேலும் மூன்று ஆண்டுகள் அதாவது 10—1—1987-லிருந்து 9--1--1990 வரை நீட்டித்து அரசு 6—3—1987 அன்று ஆணை பிறப்பித்துள்ளது.

3. கோரிக்கைகள் 3 முதல் 8 முடிய, பல்கலைக் கழகத்தின் ஆய்வில் உள்ளன என்று வேளாண்மைப் பல்கலைக் கழகப் பதிவாளர் கூறியுள்ளார்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிற விளக்கத்தில் 3 முதல் 8 வரை இருக்கிற கோரிக்கைகள் பல்கலைக் கழகத்தினுடைய ஆய்விலே இருப்பதாகவும், முதல் கோரிக்கையான 1,100 ரூபாய் அடிப்படைச் சம்பளம் என்கிற கோரிக்கை அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்கள். இந்தக் கோரிக்கைகள் 1983-லிருந்து ஆசிரியர்களுடைய சங்கத்தின் மூலம் எழுப்பப்பட்டிருக்கின்றன. மிக நியாயமான முறையில் பல்கலைக் கழகத்திடமும், அரசிடமும் அவர்கள் அக்கோரிக்கையை முன்வைத்து, எந்தக் கால கட்டத்திலும் போராட்டம் என்கிற உணர்வுக்கே தள்ளப்படாமல் அவர்களுடைய நியாய உணர்வை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

1987 ஏப்ரல் 9] [திரு. க. இராசாராம்]

ஆகவே, மற்ற பல்கலைக்கழகங்களோடு இந்தப் பல்கலைக் கழகத்தை ஒப்பிட வேண்டிய அவசியம் இல்லையென்றாலும் கூட, 750 ரூபாய் சம்பளம், ஒரு பி.எச்டி. படித்து முடித்த விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களுக்கு என்பது எந்தவிதத்திலும் நியாயத்திற்கு உட்பட்டதல்ல என்பதை உணர்ந்தும், 1,100 ரூபாய் சம்பளம் என்பது வேளாண் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு நியாயமான ஒன்று என்பதைக் கருத்திலே கொண்டும், ஏற்கனவே இந்தப் பல்கலைக்கழகம் அரசாங்கத்திற்கு இரண்டு கோடி ரூபாய் வருமானமும் சம்பாதித்துக் கொடுக்கிறது என்ற அந்த அடிப்படையிலேயும், 450-க்கும் மேற்பட்ட பேராசிரியர்களுடைய பணியிடங்கள் இந்தப் பல்கலைக்கழகத்திலே காலியாக இருக்கின்றன. வெற்றிடங்களாக இருக்கின்றன என்பதைக் கருத்திலே கொண்டும், முதல் கோரிக்கையை—ஏற்கனவே அமைச்சர், அவர்கள் சம்பந்தப்பட்ட சங்கத்தோடு பேசியிருக்கிறார்கள்—உடனடியாக நிறைவேற்றிக் கொடுப்பதற்கு ஆவன செய்து போராட்டத்தைத் தவிர்ப்பதற்கான முயற்சியை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, நான் ஆசிரியர்கள் சங்கத்தோடு, அவர்களை எல்லாம் இங்கே அழைத்து நேரிலே பேசியிருக்கிறேன். அவர்களுக்குத் தரப்பட வேண்டிய சம்பளம் 1,100 ரூபாய் என நிர்ணயிப்பதைப் பற்றி அரசுக்கு செய்தி அனுப்பப்பட்டிருக்கிறது. அது தற்போது ஆய்விலே இருக்கிறது. விரைவிலே நல்ல முடிவை இந்த அரசு தரும்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்றப் பல்கலைக்கழகங்களில் போல் அல்லாமல் இந்தப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் குழுவில் பெரும்பாலும் அரசு அதிகாரிகளே இருக்கிறார்கள். ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளே அதிலே அங்கம் வகிக்கவில்லை அதனால்தான் கோரிக்கைகளைப் பல்கலைக்கழகத்திடம் நேரடியாகச் சொல்லித் தீர்வு காண முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அரசு சம்பந்தப்பட்ட உறுப்பினர்களாக இருக்கிற அதிகாரிகளை அறிவுறுத்தி, உடனடியாகப் பல்கலைக்கழக அளவிலே அவர்களுடைய 'போர்டு ஆஃப் மானேஜ்மென்ட்'டிலே தீர்க்கக்கூடிய அனைத்து கோரிக்கைகளையும் அங்கேயே தீர்த்துக் கொள்ளவேண்டும் என்ற அறிவுரையை வழங்குமாறு

கேட்டுக்கொள்வதோடு மட்டுமல்லாமல் இதில் அரசின் நிதி குறைவாகத்தான் தேவைப்படுகிறது. மூன்றில் ஒரு பகுதியைத தான் அரசு செலுத்துகிறது. மீதியை ஐ.சி.ஏ.ஆர். மற்றும யூனிவர்சிடி கிராண்ட் கமிஷன் ஆகியவை கொடுக்கின்றன. எனவே இதைக் கருத்தில் கொண்டு இந்தக் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசு இதைப்பற்றி நன்கு ஆய்வு செய்திருக்கிறது. ஆகவே, நியாயமான கோரிக்கைகளைக் குறித்து வெகு விரைவில் முடிவெடுக்க அரசு தயாராக இருக்கிறது. ஆசிரியர்கள் தகுதியை உயர்த்துவது பற்றி நான் ஆலோசனை செய்து தகவல் தரத் தயாராக இருக்கிறேன்

(ஈ) கோட்டூர் நந்தனம் இணைப்புப் பால வேலைகள்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கோட்டு-நந்தனம் இணைப்புப் பாலப் கட்டுகின்ற பணிகள் விரைவில் முற்றுப் பெறாமல் இருப்பதால் அப்பகுதிவாழ் மக்களுக்கு ஏற்படும் இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

அடையாற்றின் குறுக்கே கோட்டூர்புரம் அருகே டர்ன் புலீஸ் சாலை வழியாக அடையாறு பகுதிக்கு நேரடி போக்குவரத்து ஏற்படும் வகையில் ரூ. 74.30 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்புதல் பெற்று ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இப்பணி செயல்பட்டு வருகிறது. இப்பணி ஜூன் 1981-ல் தமிழ் நாடு கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. கூடுதலான இருவழித்தடம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கும் சேர்ந்து திருத்திய நிர்வாக ஒப்பளிப்பாக ரூ. 157 இலட்சத்திற்கு 1986 ம் ஆண்டு ஏப்ரல்